அதுசம்பந்தமாக முதல்வர் அவர்களோடு கலந்து, வருகிற நிதி ஆண்டிலே அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

சார் பதிவாளர் அலுவலகம்

***2191—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தரகம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அரசாணை எண் 103, வணிக வரி மற்றும் பதிவுத் துறை நாள் 30-10-08 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் தொடங்கி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரகம்பட்டி பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, அரசு சார்பில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய பொற்கால ஆட்சியின் தலைவர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தொகுதியின் தலைமையிடமாக உள்ள கிருஷ்ணராயபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும்

2008 நவம்பர் 12]

சார் பதிவாளர் அலுவலகத்திற்கு, வரும் நிதி ஆண்டில் முன்னுரிமை கொடுத்து, அரசு சார்பில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமையிடமாக விளங்கக்கூடிய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகத்தைச் சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகங்களை ஆண்டுதோறும் படிப்படியாக புதிய கட்டடத்தில், சொந்தக் கட்டடமாக மாற்றக்கூடிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மொத்தமுள்ள 558 சார் பதிவாளர் அலுவலகங்களில் 244 சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டு 15 கட்டடங்களுக்கும், 2007-2008 ஆம் ஆண்டு 20 புதிய கட்டடங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். வருங்காலத்தில், நிதி நிலைமையைப் பொறுத்து படிப்படியாக புதிய கட்டடங்களாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

விடுதி வசதி

***30706—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ / மாணவியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?